| | |
|---|---|
| திரு.தி.ஜனார்த்தனன்,<br>நகர்மன்ற தலைவர் | நகராட்சி அலுவலகம், புன்செய்ப் புளியம்பட்டி<br>நாள்.23.03.2023 |

அன்புடையீர் வணக்கம்,

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியின் அவசர கூட்டம் **திருவள்ளுவர் ஆண்டு 2053 மீனம் (பங்குனி) மாதம் 10ம் நாள்**, 2023-ம் ஆண்டு **மார்ச் மாதம் 24–ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில்** நகர்மன்ற கூட்ட அறையில் நடைபெற உள்ளது. கூட்ட பொருள்கள் இத்துடன் இணைத்து அனுப்பியுள்ளேன் தாங்கள் தவறாது கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அன்புடன்

(தி.ஜனார்த்தனன்)

**பொருள் எண்.1**

**நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்பட்ட பொருள்**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் கடந்த 2022–23ஆம் நிதி ஆண்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றவுடன் உள்ளாட்சி அமைப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து பல்வேறு வளர்ச்சித்திட்ட பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் ஈரோடு மாவட்டம், புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியை பொருத்தவரை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் மாண்புமிகு.திரு.கே.என்.நேரு அவர்கள், வீட்டு வசதித்துறை அமைச்சர் மாண்புமிகு.திரு.சு.முத்துச்சாமி அவர்கள் மற்றும் நீலகிரி பாராளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு.திரு.ஆ.இராசா அவர்கள் ஆகியோரின் வழிகாட்டுதலின் படி கீழ்காணும் வளர்ச்சி திட்டப்பணிகள் இந்நகராட்சியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன் விபரம் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | திட்டம் | பணிகள் விபரம் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம் 2021–22 | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் ஜவஹர் மெயின் ரோட்டில் அமைந்துள்ள வாரச்சந்தை மேம்படுத்துதல் பணி | 359.85 |
| 2 | கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம் 2021–22 | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.03, தில்லை நகர் (சர்வே எண்.146/6,6A,6B) பகுதியில் பூங்கா அமைத்தல் பணி | 69.00 |
| 3 | நமக்கு நாமே திட்டம் 2021–22 | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள மூன்று பூங்காக்கள் மேம்படுத்துதல் பணி | 21.00 |
| 4 | SBM 2.0 | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15, வாரச்சந்தை பகுதியில் புதிதாக பொதுக்கழிப்பிடம் கட்டுதல் பணி | 36.28 |
| 5 | பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி வார்டு எண்.15, வாரச்சந்தை பகுதியில் 2.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட தொட்டி கட்டுதல் பணி | 35.00 |
| 6 | SBM 2.0 | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12, நம்பியூர் சாலையில் உள்ள குப்பைகளை உயிர் சுரங்க முறையில் (Bio Mining) அகற்றுதல் பணி | 140.00 |
| 7 | AMRUT 2.0 | குடிநீர் திட்ட அபிவிருத்தி பணிகள் | 5207.00 |
| | | **மொத்தம்** | **5868.13** |

மேற்கண்ட திட்டப்பணிகளை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் மேற்கண்ட திட்டங்களை செயல்படுத்த உறுதுணையாக இருந்த நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் மாண்புமிகு.திரு.கே.என்.நேரு அவர்களுக்கும், வீட்டு வசதித்துறை அமைச்சர் மாண்புமிகு.திரு.சு.முத்துச்சாமி அவர்களுக்கும் மற்றும் நீலகிரி பாராளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு.திரு.ஆ.இராசா அவர்களுக்கும் புன்செய்ப் புளியம்பட்டி பொதுமக்களின் சார்பாகவும் மற்றும் நகர்மன்றத்தின் சார்பாகவும் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம்.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் பதிவுசெய்யலாம்.

**<u>பொருள் எண்.2</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.17404/2022/எம்-1 நாள்.10.03.2023ல் தெரிவித்துள்ளபடி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சமூக நலத்துறையின் மான்ய கோரிக்கையின் போது அரசு பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் **"அரசு பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கப்படும்"** எனும் சிறப்பு திட்டத்தினை அறிவித்துள்ளார். அதனடிப்படையில் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான ஜவஹர் மெயின் ரோட்டில் அமைந்துள்ள நகராட்சி தொடக்கப்பள்ளி, இராமநாதபுரம் தொடக்கப்பள்ளி மற்றும் ஜெ.ஜெ.நகர் நடுநிலைப்பள்ளி ஆகிய மூன்று பள்ளிகளை ஒருங்கிணைக்கும் விதமாக ஜவஹர் மெயின் ரோட்டில் அமைந்துள்ள நகராட்சி தொடக்கப்பள்ளியில் புதிதாக ஒருங்கிணைப்பு சமையற்கூடம் கட்டுவதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.20.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.428/2023/இ1)**

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண்.3</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2.0 திட்டத்தின் கீழ் அரசாணை (நிலை) எண்.01 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.02.01.2023ல் தெரிவித்துள்ள வழிகாட்டுதலின் படியும் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.9192/2022/SBM1 நாள்.13.01.2023ல் தெரிவித்துள்ள படி, புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள குடியிருப்பு மற்றும் வணிக நிறுவனங்களில் இருந்து வெளியேறும் கழிவு நீரை வார்டு எண்.14, பாண்டியன் கிணறு பகுதியில் கழிவுநீர் சுத்திகரிப்பு முறை மூலம் சுத்திகரிப்பு செய்தல் மற்றும் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான குரும்பபாளையம் கிராமம் சர்வே எண்.355/1-ல் கசடு கழிவு சுத்திகரிப்பு மையம் (STP cum FSTP) அமைத்தல் பணிக்கு திட்ட மதிப்பீடு சமர்பிக்க கோரியதற்கினங்க ரூ.669.60 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு செய்து வழங்கக் கோரி 01.03.2023 ஆம் தேதியன்று திட்ட மதிப்பீடு தயார் செய்து சமர்ப்பிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.9192/2022/SBM-1 நாள்.15.03.2023ல் மேற்குறிப்பிட்டுள்ள பணியினை ரூ.6.63 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதியும் கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடும் செய்து கடிதம் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | மதிப்பீட்டு தொகை (ரூ. கோடியில்) | நிதி ஒதுக்கீடு | | |
|---|---|---|---|---|
| | | GoI 50% | State 33% | ULB 17% |
| 1 | 6.63 | 3.315 | 2.1879 | 1.1271 |

(ந.க.எண்.013/2023/இ1)

அலுவலக குறிப்பு:–

அ) மன்றம் பதிவு செய்யலாம்

ஆ) நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொழில்நுட்ப அனுமதி பெற மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்

**பொருள் எண்.4**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான அலுவலக கட்டிடமானது ஜவஹர் மெயின் ரோடு சாலையில் சர்வே எண்.242/1ல் பேருந்து நிலையம் அருகில் கடந்த 1970ம் ஆண்டு கட்டப்பட்டு தற்போது வரை செயல்பாட்டில் இருந்து வருகிறது. இவ்வலுவலகத்தின் மொத்த பரப்பளவு 4500.00ச.மீ ஆகும். அதில் 860.00 ச.மீ பரப்பளவில் அலுவலகக்கட்டிடம் செயல்பட்டு வருகிறது. மீதமுள்ள 3640.00 ச.மீ பரப்பளவு இடமானது காலியாக உள்ளது. மேற்படி கட்டிடம் கட்டப்பட்டு 52 ஆண்டுகள் ஆகிவிட்ட காரணத்தாலும், நகர்மன்ற கூடம், பொதுப்பிரிவு, பொறியியல் பிரிவு, நகரமைப்பு பிரிவு மற்றும் பொதுசுகாதாரப்பிரிவு ஆகிய பிரிவுகள் திறம்பட செயல்பட போதிய இருக்கை வசதிகள் அமைக்க அலுவலககட்டிடத்தில் இடவசதி இன்றியும் உள்ளது. மேலும், தற்பொழுது உள்ள அலுவலககட்டிடத்தின் மேற்கூரை மற்றும் பக்கச்சுவர்களில் மழை காலங்களில் தண்ணீர் கசிந்து விரிசல்கள் ஏற்பட்டுவருகிறது.

மேற்படி அலுவலக கட்டிடம் 2004ல் நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட பின்னரும் புதிய கட்டிடம் கட்டப்படாமல் பழைய கட்டிடத்திலேயே செயல்பட்டு வருகிறது. எனவே பணியாளர்களின் வசதி மற்றும் பொதுமக்களின் சேவை ஆகியவற்றினை கருத்தில் கொண்டு இக்கட்டிடம் மிகவும் பழமையாக உள்ளதாலும், நகரின் வளர்ச்சிக்கேற்ப அலுவலக கட்டிடத்தை இடித்துவிட்டு புதிதாக ரூ.4.00கோடி மதிப்பீட்டில் புதிதாக அலுவலககட்டிடம் கட்டப்பட வேண்டியுள்ளது. எனவே திட்ட கருத்துரு தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ.கோடியில் |
|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி அலுவலகத்திற்கு புதிதாக அலுவலக கட்டிடம் கட்டுதல் பணி | 4.00 |
| | மொத்தம் | 4.00 |

(ந.க.எண்.434/2023/இ1)

அலுவலக குறிப்பு:–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.5**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி, திரு.வி.க தெருவில் அமைந்துள்ள இந்நகராட்சிக்கு சொந்தமான கலைஞர் திருமண மண்டபம் கட்டப்பட்டு 45 ஆண்டுகளை கடந்துள்ள காரணத்தாலும், மேற்கூரை மற்றும் சுவர்கள் மிகவும் பழுதடைந்து அதன் உறுதித்தன்மையை இழந்த நிலையில் உள்ளதாலும், மேலும் நகராட்சியின் நிதிநிலையை மேம்படுத்தும் பொருட்டு மேற்படி திருமண மண்டபத்தை இடித்துவிட்டு ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் புதிதாக திருமண மண்டபம் கட்டப்பட வேண்டியுள்ளது. எனவே திட்ட கருத்துரு தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1 | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான பழைய திருமண மண்டபத்தை இடித்து விட்டு புதிதாக திருமண மண்டபம் கட்டுதல் பணி | 4.00 |

**(ந.க.எண்.433/2023/இ1)**

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண்.6</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமாக ஜவஹர் மெயின் ரோட்டில் அமைந்துள்ள வணிக வளாக கடைகள் கட்டப்பட்டு 50 ஆண்டுகளை கடந்துள்ள காரணத்தாலும், மேற்படி கடைகளின் மேற்கூரையானது பழுதடைந்து அடிக்கடி இடிந்து விழுவதாலும் கடைகளை ஏலம் கோர எவரும் முன்வருவதில்லை. இதனால் நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படுகிறது. எனவே நகராட்சியின் நிதிநிலையை மேம்படுத்தும் பொருட்டு மேற்படி பழைய கடைகளை இடித்துவிட்டு புதிதாக வணிக வளாகம் கட்டவும், மேலும் வாரச்சந்தையின் முன்புறம் உள்ள காலியிடத்தில் புதிதாக வணிக வளாகம் என மொத்தம் 74 கடைகள் ரூ.7.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட வேண்டியுள்ளது. எனவே திட்ட கருத்துரு தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1 | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி ஜவஹர் மெயின் ரோடு மற்றும் வாரச்சந்தையின் முன்புறம் உள்ள காலியிடத்தில் புதிதாக வணிக வளாகம் (74 கடைகள்) கட்டுதல் பணி | 7.50 |

**(ந.க.எண்.1769/2022/இ1)**

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண்.7</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான ஜவஹர் மெயின் ரோட்டில் அமைந்துள்ள நகராட்சி தொடக்கப்பள்ளியில் உள்ள கழிப்பறை மற்றும் சத்துணவுக்கூடம் மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளதால் மேற்படி கட்டிடங்களை இடித்து விட்டு புதிதாக கழிப்பறை மற்றும் சத்துணவுக்கூடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்த ஆகும் செலவினம் ரூ.2.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.427/2023/இ1)**

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண்.8</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான ஜவஹர் மெயின் ரோட்டில் அமைந்துள்ள நகராட்சி தொடக்கப்பள்ளியில் உள்ள கழிப்பறை மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளதால் மேற்படி கட்டிடங்களை இடித்து விட்டு புதிதாக கழிப்பறை கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே புதிதாக கழிப்பறை கட்டுவதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.9.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.429/2023/இ1)**

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

<u>பொருள் எண்.9</u>

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான ஜவஹர் மெயின் ரோட்டில் அமைந்துள்ள நகராட்சி தொடக்கப்பள்ளியில் உள்ள சத்துணவுக்கூடம் மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளதால், மேற்படி கட்டிடங்களை இடித்து விட்டு புதிதாக சத்துணவுக்கூடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே புதிதாக சத்துணவுக்கூடம் கட்டுவதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.9.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.430/2023/இ1)**

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

<u>பொருள் எண்.10</u>

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.15, வாரச்சந்தை பகுதியில் அமைந்துள்ள நுண்ணுயிர் உரமாக்கல் மையத்தில் வர்ணம் பூசுதல் பணிக்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.2.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.431/2023/இ1)**

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

<u>பொருள் எண்.11</u>

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து விநியோகம் செய்யப்படும் குடிநீர் சுத்திகரிப்பு பணி மேற்கொள்ள ஒரு வருடத்திற்கு தேவையான குளோரின் கேஸ் சிலிண்டர் வாங்கி பயன்படுத்திக் கொள்ளவும் அதற்கான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.432/2023/இ1)**

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை 2023-2024 ஆம் ஆண்டின் திட்ட மதிப்பில் குடிநீர் நிதியில் பணி மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

<u>பொருள் எண்.12</u>

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்து நிலையத்தில் பொதுமக்கள் அதிகமாக வந்து செல்ல இருப்பதால் காலை மற்றும் மாலை நேரங்களில் கூட்ட நெரிசல் அதிகமாக காணப்படுகிறது. மேற்கண்ட நேரங்களில் பொதுமக்களின் பாதுகாப்பு நலன் கருதி கூட்ட நெரிசல்களை கண்காணிக்க புற காவல் நிலையம் அமைக்க ஏதுவாக பேருந்து நிலைய கடை எண்.7 மற்றும் 8ன் மத்தியில் உள்ள மாடிப்படி அறை, பேருந்து நிலைய கடை எண்.25 மற்றும் 26ன் மத்தியில் உள்ள மாடிப்படி அறை ஆகிய இடங்களில் புற காவல் நிலையம் அமைத்துக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 344 /2023/இ1)**

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

**<u>பொருள் எண்.13</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு பவானிசாகர் மற்றும் அண்ணா நகர் நீரேற்று நிலையங்களில் குடிநீர் பராமரிப்பு பணிக்காக ஆறு நபர்களை தனியார் மூலமாக பணி அமர்த்தி கொள்ளும் பணிக்கு திரு.வி.ஜெயராஜ் என்பவருக்கு நிபந்தனைகளுக்கு உட்பட்டு இவ்வலுவலக செயல்முறை உத்திரவு ந.க.எண். இ1/387/2017 நாள்.27.05.2020ல், 01.06.2020 முதல் 31.05.2021 வரை ஓராண்டு ஒப்பந்த காலத்திற்கு நீட்டித்து பணி ஆணை வழங்கப்பட்டது. மேற்படி பணிக்கு புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோர கால தாமதம் ஆகும் என்பதால், குடிநீர் விநியோக பணி அத்தியாவசிய பணி என்பதால், இப்பணியின் அவசர அவசியம் கருதி தற்போதைய ஒப்பந்ததாரர் திரு.வி.ஜெயராஜ் என்பவருக்கு பழைய விலை விகிதத்தில் 01.02.2023 முதல் 28.02.2023 வரை ஒப்பந்த காலத்தை நீட்டித்து பணி ஆணை வழங்கப்பட்டது. தற்போது மேற்கண்ட ஒப்பந்தகாலம் 28.02.2023 உடன் முடிவடைவதால் குடிநீர் விநியோக பணி அத்தியாவசிய பணியாக உள்ளதாலும், தற்போதைய ஒப்பந்ததாரர் திரு.வி.ஜெயராஜ் என்பவருக்கு பழைய விலை விகிதத்தில் மேலும் ஒரு மாத காலத்திற்கு 01.04.2023 முதல் 30.06.2023 வரை ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்து குடிநீர் விநியோக பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க. எண்.387/2017/இ1)**

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண்.14</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி ஈரோடு மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் பரவலாக காணப்படுகிறது. இருப்பினும் இந்நகராட்சி பகுதியில் இதுவரை டெங்கு காய்ச்சலால் பொதுமக்கள் பாதிக்கப்படாமல் தடுப்பு நடவடிக்கைகள் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் வாயிலாக திறம்பட மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியானது ஈரோடு மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் ஏற்படா வண்ணம் முற்றிலும் தடுக்கப்படும் வரை இப்பணியினை தொடர்ந்து மேற்கொள்வது அவசியமாகிறது. எனவே பொது சுகாதார அவசர அவசியம் கருதி 10 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் திரு.வி.ஜெயராஜ், ஒப்பந்ததாரர், புன்செய்ப் புளியம்பட்டி என்ற தனியார் மூலமாக நகர் மன்ற தீர்மான எண்.125 நாள்.29.05.2020ன் படி டெங்கு காய்ச்சல் தொற்று நோய் தடுப்புப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியினை தொடர்ந்து 01.04.2023 முதல் 30.06.2023 வரை திரு.வி.ஜெயராஜ், ஒப்பந்ததாரர் அவர்களுக்கு இப்பணியினை நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.447/2017/எச்1)**

**<u>அலுவலகக்குறிப்பு :–</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

**<u>பொருள் எண்.15</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் 01.04.2021 முதல் 31.03.2024 வரை உள்ள மூன்றாண்டு காலத்திற்கு திரு.ப.தினேஷ் என்பவருக்கு இவ்வலுவலக செயல்முறை உத்தரவு ந.க.எண்.1702/2020/அ1 நாள் 17.02.2021–ல் உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும், 01.04.2021 முதல் 31.03.2022 வரையுள்ள முதலாமாண்டு குத்தகைத் தொகை ரூ.9,00,009/–யை முன்பணமாக ஏழு நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் மேற்படி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி குத்தகைத் தொகையில் மூன்றில் ஒரு பங்குத் தொகை ரூ.3,00,009/– மட்டுமே செலுத்தப்பட்டுள்ளது.

01.04.2021 முதல் 31.03.2022 வரையுள்ள குத்தகை காலத்திற்கு உரிய ஆண்டு குத்தகைத் தொகை ரூ.9,00,009/–யை செலுத்தக் கோரி இவ்வலுவலக அறிவிப்புக் கடிதம் ந.க. எண்.1702/2020/அ1 நாள் 10.05.2021, 12.10.2021, 18.11.2021, 02.12.2021, 22.12.2021, 08.01.2022, 09.02.2022, மற்றும் 18.03.2022 ஆகிய தேதிகளில் அறிவிப்புக் கடிதம் அனுப்பியும் குத்தகைதாரல்

குத்தகை வைப்புத்தொகை ரூ.3,00,009/– மட்டுமே செலுத்தப்பட்டுள்ளது. மீதம் ரூ.6,00,000/– குத்தகை வைப்புத்தொகை செலுத்தாமல் நிலுவையில் உள்ளது.

2022–23ம் ஆண்டு மேற்படி குத்தகை கேட்புத்தொகை ரூ.9,45,009/–ல் இதுாள் வரை ரூ.4,40,000/– மட்டுமே செலுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள குத்தகை கேட்புத்தொகை ரூ.5,05,009/– செலுத்தக்கோரி அறிவிப்புகள் வழங்கபட்டிருந்தும், இதுநாள் வரை செலுத்தப்படாமல் நிலுவையில் உள்ளது. இந்நிலையில் மேற்படி குத்தகைதாரர் திரு.ப.தினேஷ் என்பவர் தான் செலுத்த வேண்டிய குத்தகை நிலுவை தொகைக்கு அன்னாரின் குத்தகை வைப்புத்தொகையிலிருந்து ஈடு செய்து கொள்ளுமாறும், மேலும் 01.04.2023 முதல் தொடர்ந்து தன்னால் நடத்த இயலாது என தெரிவித்தும் 03.03.2023–ஆம் தேதியன்று கடிதம் வழங்கியுள்ளார். எனவே மேற்படி குத்தகைதாரர் செலுத்திய குத்தகை ஏல வைப்புத் தொகை, ஏல கூடுதல் வைப்புத் தொகை, மற்றும் குத்தகைதாரர் செலுத்திய குத்தகை வைப்புத் தொகை ரூ.5,25,000/–யை ஆணையர் அவர்களின் அறிவுரையின்படி குத்தகைதாரர் செலுத்த வேண்டிய குத்தகை நிலுவைத் தொகை ரூ.5,05,009/–க்கு 03.03.2023–ம் தேதியன்று ஈடுசெய்யப்பட்டுள்ளது.

எனவே, திரு.ப.தினேஷ் என்பவருக்கு வழங்கப்பட்ட மேற்படி குத்தகை உரிமத்தினை ரத்து செய்யவும், மேற்படி குத்தகை இனத்திற்கு குறுகிய கால மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தி குத்தகை இனத்தை ஒப்படைக்கும் நாள் வரை துறை மூலம் வசூல் செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1702/2020/அ1)**

**அலுவலகக் குறிப்பு :-**

1) அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி குத்தகை இனத்தினை ரத்து செய்யவும், குறுகிய கால மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தி ஒப்படைக்கும் நாள் வரை துறை மூலம் வசூல் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3) மேற்படி குத்தகை இனத்திற்கு துறை வசூல் செய்ய தேவையான கட்டண இரசீதுகள் அவசர அவசியம் கருதி உள்ளூர் அச்சகத்தில் அச்சடித்துக்கொள்ளவும், மேலும் குறுகிய கால மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்த நாளிதழில் விளம்பரம் செய்யவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண்.16</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.9514/2022/தி1 தூ.இ.தி, நாள்.11.05.2022–ன் படி நகரங்களின் தூய்மையான மக்கள் இயக்கத்தின் மூலம் ஒவ்வொரு 2வது மற்றும் 4வது சனிக்கிழமைகளில் திடக்கழிவு மேலாண்மை விதிகளின் படி மிகச்சிறப்பாக செயல்படுத்தும் நகராட்சி தூய்மை பணியாளர்கள், தன்னார்வலர்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் ஆகியோர்க்கு சிறப்பு பரிசு வழங்கி கௌரவிக்கப்பட வேண்டியுள்ளது. எனவே வரும் காலங்களில் திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி சிறப்பாக செயல்படும் நபர்களுக்கு நகராட்சியின் மூலமாக நினைவு பரிசுகள் மற்றும் கேடயம் வழங்க வேண்டி உள்ளது. எனவே அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.20,000/–ஐ 2023–2024 ஆம் ஆண்டு பொது நிதியிலிருந்து அவ்வப்போது ஏற்படும் சில்லரை செலவு செய்து கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.815/2022/எச்1)**

**அலுவலக குறிப்பு:**

அ) பொது சுகாதார அவசரம் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ)அரசு திட்டத்தின் அவசியம் கருதி முன் அனுமதி வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**<u>பொருள் எண்.17</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட 18 வார்டுகளில் 7195 குடியிருப்பு பகுதிகள் மற்றும் பூங்கா காலியிடம் மற்றும் அரசு அலுவலகங்கள் ஆகிய பகுதிகளில் முதிர்ந்த டெங்கு கொசு ஒழிப்பு பணிக்கு புகை மருந்து தெளிக்க மூன்று பல்ஸ் பாக்கிங் இயந்திரம் உள்ளது. அதில் தற்சமயம் ஒன்று மட்டும் பயன்பாட்டில் உள்ளது. இரண்டு பயன்பாட்டில் இல்லை இப்பயன்பாட்டில் இல்லாத பல்ஸ் பாக்கிங் இயந்திரத்தினை தொழில்நுட்ப வல்லுநர் கொண்டு பழுது நீக்கம் செய்யப்பட வேண்டியுள்ளது. அதன் அடிப்படையில் பல்ஸ் பாக்கிங் இயந்திரம் பழுது நீக்கும் பணியை மேற்கொள்ள விலைப்புள்ளி பெற்றும், அவ்வப்போது பல்ஸ் பாக்கிங் இயந்திரம் பழுது ஏற்படும் போது பழுதுகளை சரிசெய்து கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.30,000/– மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.2097/2022/எச்1)**

**அலுவலக குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

**<u>பொருள் எண்.18</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட 18 வார்டுகளிலும் தினசரி சேகரம் ஆகும் மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரித்து பேட்டரி வண்டி மற்றும் தள்ளு வண்டியின் மூலம் வாங்கப்பட்டு வருகிறது. வீடுகள் தோறும் குப்பைகள் வாங்கும் போது வண்டிகளில் 50 லிட்டர் & 80 லிட்டர் கொள்ளளவு உள்ள Bin Green & Blue வண்ணம் கொண்ட பாக்ஸில் வாங்கப்பட வேண்டும். எனவே இப்பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பொருட்கள் ஒப்பந்தப்புள்ளி கோரி வாங்க ஆகும் செலவினம் ரூ.5.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.2098/2022/எச்1)**

**அலுவலக குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

**<u>பொருள் எண்.19</u>**

தூய்மை இந்தியா திட்டம் நகர்ப்புற உள்ளாட்சிகளில் மக்கும் கழிவுகளில் இருந்து தயாரிக்கப்படும் இயற்கை உரம் “ **செழிப்பு**” என்ற பெயரில் விற்பனை செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண்.3088/2022/தூ.இ.தி/1-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே நகராட்சியில் இருந்து தயாரிக்கப்படும் உரத்தை இணை இயக்குனர் வேளாண்மை துறை அவர்களிடம் இருந்து உரிமம் பெற்று செழிப்பு உரம் தயார் செய்து 5 கிலோ மற்றும் 25 கிலோ அரசு முத்திரையுடன் பேக்கிங் செய்து 1 கிலோ உரத்தினை ரூ.20–க்கு விற்பனை செய்ய அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. எனவே செழிப்பான பசுமை உரம் தயார் செய்ய பேக்கிங் மற்றும் உரத்திற்கான உரிமம் பெற அரசு அலுவலத்திற்கு செலுத்த வேண்டிய தொகை மற்றும் கம்போஸ்டிங் ஆன உரத்தை பகுப்பாய்வு செய்ய முதல்வர் மற்றும் பேராசிரியர், சுற்றுச்சூழல் துறை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் கோவை அவர்களிடம் பகுப்பாய்வு சான்று பெற வேண்டி அதற்காகும் செலவினத்தொகை ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.0405/2023/எச்1)**

**அலுவலக குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

**<u>பொருள் எண்.20</u>**

தூய்மை இந்தியா திட்டம் SBM 2.0 உள்ளாட்சிகளில் பயன்பாட்டில் உள்ள பொது மற்றும் சமுதாய கழிப்பறைகள் பயன்படுத்துவோரின் கருத்தை தெரிவிக்க QR-CODE பொருத்துதலின் படி நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.31420/2022/தூ.இ.தி.–2, நாள். 27.10.2022 படி புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட 18 வார்டுகளில் சுமார் 15 கழிவறைகளில் (சமுதாய கழிவறைகளின் 11 எண்ணிக்கை மற்றும் பொதுக் கழிப்பிடங்களின் 4 எண்ணிக்கை) பொதுமக்கள் தங்கள் பகுதியில் பயன்படுத்தப்படும் கழிவறையின் சுகாதார சம்மந்தப்பட்ட தங்களின் கருத்துக்களை பொதுமக்கள் தங்களின் சொந்த அலைபேசியின் வாயிலாக MY TOILET (APPLICATION) செயலியின் மூலம் கருத்து தெரிவிக்க ஒவ்வொரு கழிவறையின் முன்பு பொருத்தப்பட்டுள்ள QR–CODE வாயிலக அலைபேசியின் மூலம் தெரிவிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே இப்பணியானது மிகவும் அவசரம் அவசியம் என்பதாலும், தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக QR-CODE பொருத்தி பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டி உள்ளது. அதற்கான செலவின தொகை ரூ.30,000/–க்கு ஒப்பந்தப்புள்ளி கோரி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.2093/2022/எச்1)**

**அலுவலக குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

**இப்படிக்கு**
**நகர்மன்ற தலைவர்**
**புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி**